## அரிசோனா



# ஒய்வுபெறுகிற நேரமா?

*தேவன் தேவனாகச் செயல்படக் காத்திருக்கத் தீர்மானித்தார்.*

அரிசோனாவில் உள்ள ஹால் புரூக் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் இந்தியன் பள்ளியில் முதல்வராகப் பணியாற்றி வந்த பெட்ரோ, தான் ஓய்வுபெறுகிற நேரம் வந்துவிட்டதாக நினைத்தார். அதுபற்றி தன் மனைவியிடமும் கூறினார்.

''வேறொரு வேலையைப் பார்க்கவேண்டியதுதான்'' என்றார்.

அங்கு அவர் பள்ளி முதல்வராகப் பணியாற்றி 12 வருடங்கள் கடந்திருந்தன. பள்ளி பணியாளர்களின் பிரச்சினைகளைச் சமாளித்திருக்கிறார். பள்ளியில் பல சவால்களைக் கடந்து வந்திருக்கிறார். அவை அனைத்தும் அவரை அதிகமாகப் பாரப்படுத்தியிருந்தன.

பிறகுதான், முதன்முதலாக பள்ளி முதல்வராகப் பதவியேற்ற சமயத்தில், தேவனுடன் செய்திருந்த ஒரு பொருத்தனை பெட்ரோவுக்குநினைவுக்குவந்தது.'தேவனே, மிகப்பெரிய பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறீர்; இதை நான் உண்மையோடு செய்வதற்கு எனக்கு உதவும். நீர் என்னைப் போகச் சொல்லுகிற வரையிலும் இங்குதான் இருப்பேன்' என்று அப்போது ஜெபித்திருந்தார்.

பிறகு, அதிக பாரமடைந்து, வேலையை விட்டுவிடத் தீர்மானித்த சமயத்தில், தேவனிடம் இன்னொரு ஜெபம் ஏறெடுத்தார்.

'தேவனே, நான் செய்த பொருத்தனை எனக்கு மறக்கவில்லை. நான் பொய்யனாக இருக்க விரும்பவில்லை. நான் இங்கிருந்து செல்வது உமக்கு விருப்பமா?' என்று கேட்டு ஜெபித்தார்.

உடனடியாக அவருக்கு பதில்

கிடைக்கவில்லை. எனவே, ஹால் புரூக்கின் ஆசிரியர்கள் மற்றும் மாண வர்களிடம் அவர் அடிக்கடி சொல் லுகிற ஒன்றை தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தீர்மானித்தார். அதாவது, தேவன் தேவனாகச் செயல்படக் காத்திருக்கத் தீர்மா னித்தார்.

ஒரு வாரம் கடந்தது.

பிறகு,இரண்டுவருடங்களுக்கு முன்பு ஹால்புரூக்கில் ஒன்றாம் வகுப்பு படித்த ஒரு மாணவி, மீண் டும் ஹால்புரூக்கில் சேர விரும்பு வதாக பெட்ரோ கேள்விப்பட்டார். அந்தச் சிறுமியின் பெயர் ரெய்ன்; நல்ல புத்திசாலி சிறுமி. கோவிட் பெருந்தொற்று காரணமாக அவ ளுடைய அம்மா அவளை பள்ளி யிலிருந்து நிறுத்தியிருந்தார். பழங் குடியின மக்கள் பலர் அவ்வாறே தங்கள் பிள்ளகளை இரண்டு வரு டங்களாக பள்ளிக்கு அனுப்பவே இல்லை. ரெய்ன் பள்ளியைவிட்டுச் சென்ற சமயத்தில் பெட்ரோவுக்கு வருத்தமாக இருந்தது. இப்போது அவள் திரும்பி வருகிற செய்தி அவருக்கு சந்தோஷமாக இருந்தது. யாராவது புரளியைக் கிளப்பியிருக் கலாமோ என்றுகூட யோசித்தார். இதற்குமுன் இரண்டுமுறை இது போன்ற செய்தி கிடைத்தது; ஆனால் அவள் பள்ளிக்கு வரவில்லை.

சில நாட்கள் கழித்து, ரெய் னின் அம்மா தன்னைச் சந்திக்க வரப் போவதை பெட்ரோ அறிந்தார். பள்ளியிலிருந்து சென்று நீண்ட நாட்களாகி, பிறகு திரும்பி வந்த மாணவர்கள் அனைவரையும் பெட் ரோ சந்தித்துப் பேசினார்.

பெட்ரோவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் ரெய்ன் திரும்பி வருவாளா என்று உறுதியாகத் தெரி யாததால் அதிக பரபரப்பு அடைய வில்லை.

வெள்ளிக்கிழமை காலையில் 10 மணிக்கு வருவதாக அவளு டைய அம்மா சொல்லியிருந்தார். சரி, ரெய்ன் திரும்பி வருவதற்கு அதிக வாய்ப்பிருந்தது பெட்ரோ வுக்குப் புரிந்தது.

வெள்ளிக்கிழமை காலையில், பள்ளி வளாகத்திற்குள் ஒரு கார் வந்தது. காரிலிருந்து ரெய்னும் அவ ளது அம்மாவும் இறங்கிவந்தார் கள். பள்ளியின் நிர்வாக அறையை நோக்கி வந்தார்கள்.

பெட்ரோ அந்தக் கட்டிடத்தின் கண்ணாடி கதவருகே சென்று, கண் ணாடியின் வழியாகப் பார்த்தார்.

ரெய்ன் அவரைப் பார்த்துவிட் டாள். உடனே மகிழ்ச்சியோடு அவரை நோக்கி ஓடிவந்தாள். அவள் வரவும் பெட்ரோ கதவைத் திறந்துவிட்டார். ரெய்ன் ஓடிச்சென்று அவரை கட்டியணைத்தாள். அவ் வளவு அன்பாக இருந்தாள். அந் தத் தருணத்தில்தான் தன் ஜெபத் திற்கு பதில் கிடைத்ததை பெட்ரோ உணர்ந்தார். அது ஹால்புரூக்கை விட்டுச் செல்வதற்கான சரியான நேரமில்லை என்பது புரிந்தது. அந் தப் பள்ளியில் அவருக்கென தேவன் மேலும் சில திட்டங்களை வைத் திருந்தார்.

“உன்னைப் பார்க்க ஆசை யாக இருந்தேன்” என்று ரெய்னி டம் சொன்னார்.

“நானும்தான்” என்று ரெய்ன்

சொன்னாள்.

“உன்னைப் பார்த்தது மகிழ்ச்சியாக இருக்கிறது” என்று பெட்ரோ சொன்னார்.

“எனக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது” என்று ரெய்ன் சொன்னாள்.

அவர்கள் பேசி முடித்த பிறகு, மைதானத்தில் விளையாட ரெய்ன் அனுமதி கேட்டாள். அங்குள்ள ஊஞ்சல்கள், சறுக்குகள் ஆகியவற்றில் அவள் மகிழ்ச்சியாக விளையாடுவதுண்டு.

“தாராளமாக விளையாடலாம், ஆனால் நீ புறப்படும் போது என்னிடம் சொல்லிவிட்டுத்தான் செல்லவேண்டும்” என்று பெட்ரோ சொன்னார்.

சற்றுநேரம் கழித்து, பெட்ரோவின் அலுவலகத்திற்கு ரெய்ன் சென்றாள்.

“சரி, இப்போது நாங்கள் கிளம்பப்போகிறோம்” என்று ரெய்ன் சொன்னாள்.

“13ம் தேதி, பள்ளி திறக்கிற நாளன்று உன்னை நிச்சயம் எதிர்பார்ப்பேன்” என்றார் பெட்ரோ.

“அதைவிட சீக்கிரமாகத் திறக்க முடியாதா?”

“ஏன், சீக்கிரமாகவே இங்கு வர விரும்புகிறாயா?” என்று கேட்டார்.

“ஆம்” என்றாள்.

“சீக்கிரம் திறப்பதற்கு எனக்கும் ஆசைதான்” என்று பெட்ரோ சொன்னார்.

“நீங்கள்தானே முதல்வர், நீங்கள் நினைத்தால் எதுவும் செய்யலாம் அல்லவா?” என்று ரெய்ன் கேட்டாள்.

உண்மைதான். தேவன் இருக்கும்போது பெட்ரோவால் எதையும் செய்யமுடியும்தான்.

‘என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு’. பிலி 4:13.

ஹால்புரூக் அட்வென்டிஸ்ட் பள்ளிக்கு உதவியாக இருந்த உங்கள் பதின்மூன்றாம் வாரக் காணிக்கைக்காக நன்றி. 2018 மற்றும் 2021 ம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பதின்மூன்றாம் வாரக் காணிக்கை அந்தப் பள்ளி வளாகத்தில் புதிதாக ஒரு உடற்பயிற்சிக் கூடமும் பல்நோக்க கட்டிடமும் கட்டுவதற்குப் பயன்பட்டு வருகிறது.

---

## கதைக் குறிப்புகள்

- அரிசோனாவில் உள்ள ஹால் புரூக்கை வரைபடத்தில் காட்டுங்கள்.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- வட அமெரிக்க டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/nad-2024.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையைச் சேர்ந்த மிகவும் பிரபலமான நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் பென் கார்சன். தலை ஒட்டி பிறந்த இரட்டையர்களை 1987 இல் வெற்றிகரமாகப் பிரித்தார்.